அசல்

7.10.97. க. மயில்வாகனன்.

அசல் - 1 நகல் - 1.

இவ்வண்ணம்
அன்பன்
க. மயில்வாகனன் சிவமயம்

உ

வறுத்தலைவிளான்
7/oct/97

ஐய!

க்ஷேமம்; தங்கள் கார்ட் மூலம் தங்கள் க்ஷேமத்தையுமறிந்தேன். இந்நாள்காறும் பிரசுரிக்கப்பட்ட எழுத்து [illegible] [illegible]. மணிமேகலை நூல் அச்சிட்டு முடிந்ததாயின், விரைவில் அனுப்புக.

எனது போதகாசிரியராய சின்னத்தம்பி [illegible] சுவாமிப்பிள்ளையவர்கள் இயற்றிய நூல்கள் கையெழுத்திலே யிருக்கின்றன. அவையாவன; (க) ஏகபாதராமாயணம் [illegible] விநோதசித்திரக்கவிகள் (உ) நகுலேசுவரர் ஊஞ்சல் [illegible] (ங) அத்தியடி விநாயகர் ஊஞ்சல் [illegible] பாலவிநாயகர் பதிகம், (ரு) சம்பவ [illegible] பேர்த்தியற்றிய [illegible] (சா) இலக்கணசந்திரிகை. இது வடசொல்வேறுபாடு, [illegible] உபசர்க்க வேறுபாடு, இடைச்சொல் வேறுபாடு, தத்திதாந்தப்பகுதிபாடு, பெயர்ச்சொற்பாடு, வினைப்பாடு, தொகுப்பாடு, உரிச்சொற்பாடு என எண்பகுதி

[left margin, written sideways:]
யிலையுடைத்து. தமிழ்மொழி, சமஸ்கிருதமொழி
யுணர்ந்தவர்களாற் பிரயோகிக்கப்பட்டவை
யங்களுள் [illegible] எழுதப்பட்டிருக்கின்றன.

அசல்

7.10.97. க. மயில்வாகனன்.

அசல் -1 நகல் -1.



நகல்

(3)

சிவமயம்

வறுத்தலைவிளான்
7/oct/97

ஐய; க்ஷேமம்;

தங்கள் கார்டு மூலம் தங்கள் க்ஷேமத்தையும் அறிந்துளேன். இந்நாள் காறும் பிரதிகார்டு எழுதாதொழிந்தேனைக் குறையெண்ணற்க. மணிமேகலை நூல் அச்சிட்டு முடிந்ததாயின் விரைவில் அனுப்புக.

எனது உபாத்தியாயராய சுன்னாகம் அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் சிலநூல்களியற்றி அச்சிட்டிருக்கிறார்கள். அவையாவன:- (க) ஏகபாதராமாயணபாகவதம். விநோதசித்திரவினவுத்தரக் கவிகள் (உ) நகுலேசுவரர் ஊஞ்சல் முதலாயன. (ங) அத்தியடி விநாயகரூஞ்சல் முதலியன. (ச) பாலவிநாயகர் பதிகம் (ரு) சம்ஸ்கிருதத்தினின்றும் மொழிபெயர்த்தியற்றிய மேகதூதக் காரிகை (சா) இலக்கணசந்திரிகை இது வடநூல்வேறுபாடு, எழுத்தொருப்பாடு, உபசருக்கக்கூறுபாடு, இடைச்சொற்கூறுபாடு. தத்தாந்தப் பாகுபாடு, பெயர்ச்சொற்பாகுபாடு, வினைச்சொற்பாகுபாடு, உரிச்சொற்பாகுபாடு, என எண்பகுதியினையுடைத்து. தமிழ்மொழி சம்ஸ்கிருதமொழி உரையாசிரியர்களால் பிரயோகிக்கப்பட்ட நியாயங்களும், அகப்பட்டனவும் எழுதப்பட்டிருக்கின்றன.

இங்ஙனம்
அன்பன்
க. மயில்வாகனன்.

நகல்

7/10/1897

11/94

copied
110

(4)

25/6/...